**<u>அசல் வழக்கு எண். 43/2019</u>**

17.10.2024

**பெயர் – சக்திவேல் (Dw3)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) இந்த வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உயில்கள் குறித்து எவ்வித ஆட்சேபணையும் தெரிவித்து எதிர்வாதம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முருகேசன் உயில்படி சொத்துக்கள் பாத்தியம் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அதை குறித்து எவ்வித ஆட்சபேணையும் நான் தெரிவிக்கவில்லை என்றால் உயிலை பார்க்காததால் நான் தெரிவிக்கவில்லை. உயிலை நான் பார்க்காத காரணத்தினால் அதன் உண்மைத்தன்மை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கந்தசாமியிடம் கிரையம் பெற்ற போது யார் என்னிடம் பூமியை விலைக்கு வாங்கிக்கொள்ளுமாறு கேட்டார் என்றால் சிவலிங்கசாமி தான் என்னிடம் கேட்டார். தாவாச் சொத்துக்களை பொறுத்து சிவலிங்கசாமி கந்தசாமியுடன் ஒப்பந்தம் போட்டிருந்தார் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற போது மேற்படி கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து தான் விலைக்கு பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்த ரத்து ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சிவலிங்கசாமியுடன் கிரைய ஒப்பந்தம் போட்ட ஆவணத்தை தான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்ததற்கு உண்டான வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(2) நான் கிரையம் பெற்ற தேதியிலேயே வாதி 1, 2 பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஏற்கனவே பிரதிவாதிகள் மீது வழக்கு நிலுவையில் இருந்ததால் நான் கிரையம் பெற்றதால் என்னையும் இந்த வழக்கில் தரப்பினராக கட்சி சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற தேதியிலேயே இந்த வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் நான் கிரையம் பெற்று வருவாய் ஆவணங்களை பெயர் மாற்றம் செய்ய கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சென்ற போது தெரிய வந்தது. நான் கிரையம் பெற்ற கந்தசாமி என்னிடம் தாவாச் சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ள விவரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

(3) கந்தசாமியும், முத்துச்சாமியும் வழக்கு நிலுவையில் உள்ளதை மறைத்து எனக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு பின்னர் தான் தெரிய வந்தது என்றால் அவர்களுக்கும் எனக்கு கிரையம் கொடுத்த பிறகு தான் வழக்கு உள்ள விவரம் தெரிய வந்தது. நான் இந்த வழக்கில் ஆஜரான பின்பு வாதிகள் எப்போது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், 1, 2 பிரதிவாதிகளுக்கு எப்போது அழைப்பாணை சென்றுள்ளது என்ற விவரத்தையும் நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.10.17 15:57:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்